**MCOP 97/2023**

**04.10.2024**

**ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் நடந்து சென்றுக்கொண்டிந்தபோது பின்புறமாக வந்து வாகனம் என்மீது மோதியது என்றால் சரிதான். என் மீது மோதிய வாகனத்தில் மூன்று பேர்கள் வந்தார்கள். வாகனத்தை ஓட்டிவந்த 1ம் எதிர்மனுதாரர் ஈஸ்வரனின் ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாத வருமானம் ரூ.50,000/- என்பதற்கான ஆதாரம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மருத்துவ செலவு செய்ததற்கான முழு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது மனுவில் கூறியுள்ள காயம், வருவாய் இழப்பு, நிரந்தர ஊனம் மற்றும் கோரியுள்ள இழப்பீட்டு தொகைக்கு உண்டான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரிடம் முறையாக இன்சூரன்ஸ் செலுத்ததாதல் 2ம் எதிர்மனுதாரர் மனுவில் கூறியுள்ளவாறு எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும், எனது அஜாக்கிரதையாலும், முறையாக இன்சூரன்ஸ் தாக்கல் செய்யாததாலும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்தமட்டும் இழப்பீடு தர பொறுப்பாக மாட்டார் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து அசல் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.